தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987 மே 5, செவ்வாய்க்கிழமை

சித்திரை 22, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம்படைக்கு".

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள்

587—(*வினா எண் 7861) **திரு. வி. பாலகிருஷ்ணன்**: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்ற நாராயணப் பெருமாள் கோவில் ஒரு பாடல் பெற்ற ஸ்தலமாகும். அங்கு ஒரு தனி நபர் பன்றிகளை வளர்த்துக் கொண்டு, அந்தக் கோவிலினுடைய புனிதத்தைக் கெடுக்கின்ற அளவிலே, ஆக்கிரமித்துக் கொண்டு—அவை அகற்றப்படாத நிலையில்—கடைகளைக் கட்டி, வாடகைக்கு விட்டிருக்கிறார். அதனை உடனடியாக அகற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நின்ற நாராயணப் பெருமாள் கோவிலுக்குத் தெற்கே 1982 ஆம் ஆண்டு முதல் உள்ள 7 ஆக்கிரமிப்புகளுக்கு பி.எம். நோட்டீஸ் வழங்கப்பட்டு தண்டத் தீர்வையும் வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. வடக்கே உள்ள 15 வீடுகள் மற்றும் கூரை ஷெட்டுகளுக்கு திருத்தங்கல் பேரூராட்சியிலிருந்து வரி விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அவற்றால் பிரச்சினை ஏதுவும் இல்லையென்று குறிப்பு தந்திருக்கிறார்கள். தனிப்பட்ட ஒருவர் ஆக்கிரமித்து கடைகள் கட்டி வாடகை வசூலித்து வருகிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் எனக்குத் தெரிவிப்பாரானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலே குறிப்பிட்டுள்ள திருக்கோவில் மட்டுமல்ல, தமிழகத்திலே மிக முக்கியமான திருக்கோவில்களின் அருகில் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பல பேர்கள் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டி விட்டுள்ளதால், அங்கு அந்தக் கோவிலினுடைய புனிதத்தைக் கெடுக்கிற வகையில் பல்வேறு வேலைகள் நடக்கின்றன. உதாரணமாக, சில ஆலயங்களுக்கு அருகில் இந்த ஆக்கிரமிப்பாளர்களது கடைகளில் இறைச்சி மற்றும் கறி வியாபாரம் செய்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே ஆலயங்களுக்கு அருகிலே இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்து அந்த ஆக்கிரமிப்பால் கோவிலின் புனிதத்தைக் கெடுக்கிற வகையில் வேலைகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

1987 மே 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, என்ன வியாபாரம் செய்கிறார்கள் என்பது கூட அல்ல, ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். அதில் அரசு உறுதியாக இருக்கிறது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பகுதியைப் பேரூராட்சிகளுக்குக் கொடுத்தால் அங்கே அங்காடிகள் கட்டி அந்தப் பேரூராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்த இடங்களைப் பேரூராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி.

588—(* வினா எண் 9283) **திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எங்கு அமைக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) 1—7—1986 நாளிட்ட வேலைவாய்ப்பு பணித் துறை அரசு ஆணை எண் 175-ல் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் ஒரு புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்த இடத்தில் பயிற்சி நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது.